மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டம், கடலூர் வட்டம், திரு மாணிக்குழி அருள்மிகு வானகுரீஸ்வரர் திருக்கோயிலின் வாயிலில ஐந்து நிலைகளுடன் கூடிய இராசகோபுரம் திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. இத்திருக்கோயில் திருப் பணி வேலைகளை மேற்கொள்ள இந்து சமய அறநிலைய ஆட்சி துறை, கடலூர் உதவி ஆணையரால் திருப்பணிக் குழு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அறநிலையச் சட்ட விதிகளைப் பின் பற்றி விரைவில் திருப்பணி வேலைகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கோவில் சிலைகள் மற்றும் நகைகளை பாதுகாக்க கண்காணிப்பு குழுக்கள்.

53—(*வினா எண் 12151)—**திரு. சைதை சா. துரைசாமி மற்றும் திரு. ஆ. சந்திரசேகரன்:** மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில் சிலைகள் மற்றும் நகைகளை பாதுகாக்க மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்களை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கோயில்களில் உள்ள சிலைகள் பாது காப்பு தொடர்பாக கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு கிராமத் திலும் விழிப்புக்குழு அமைத்து பாதுகாப்பு நடவடிக்கை செய்யப் பட்டுள்ளது.

திருக்கோயில்களில் உள்ள தங்கம், வெள்ளி மற்றும் விலை யுயர்ந்த பொருட்களை பாதுகாக்கவும், தக்க ஆலோசனை தெரி விக்கவும், ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் 6 உறுப்பினர்கள் அடங்கிய முதல்தர கமிட்டி 12—3—1986-ல் அமைக்கப்பட்டு அதன்படி இயங்கி வருவதால் மாவட்ட அளவில் இதற்கென தனியாக கண்காணிப்புக்குழு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

1987 நவம்பர் 11]

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவில் அமைக்கப்பட்ட குழுவே போதுமானது என்று சொன்னார்கள். மாவட்ட அளவில் ஒரு குழுவினை அமைப்பதால் அதிலே ஏதாவது சிரமம் ஏற்படுமா என்பது தெரியவில்லை. எனவே அந்த முயற்சியை மேற்கொண்டால் இன்னும் இந்த விழிப்புக் குழுவானது பணி புரிவதிலே மிகவும் அக்கறையோடு இருந்து செயல்படுவதன் காரணத்தைக் கொண்டும் இந்த மாவட்ட அளவிலான குழுவினை அமைப்பதற்கும், இந்த அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆலயங்களுக்கு மாத்திரம் இந்தக் குழு கட்டுப்பாடு கொண்டதா அல்லது தனியார் ஹெரிடிடரி டிரஸ்ட்டி என்று சொல்லுகின்ற அந்த ஆலயங்களுக்கும் இந்த விழிப்புக் குழு பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள கோயில்களைப் பற்றித்தான் இந்தக் குழு அதிகாரம் செலுத்தும்.

ஸ்ரீஜெனகை மாரியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு.

54—(*வினா எண் 12192) திரு. ஆ. சந்திரசேகரன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம் சோழவந்தான் ஸ்ரீஜெனகை மாரியம்மன் திருக்கோவில் குடமுழுக்கு வேலை எப்போது துவங்கப்படும்?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சோழவந்தான் அருள்மிகு ஸ்ரீஜெனகை மாரியம்மன் திருக்கோயில் இராஜகோபுரம் மற்றும் விமானம் வர்ணம் பூசுதல் வேலைக்கு ரூ. 2,200-க்கு அனுமதி அளிக்கப்பட்டு, தற்போது திருத்திய மதிப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இத்திருக்கோயிலுக்கு அலங்கார மண்டபம் கட்டும் வேலைக்கு ரூ. 78,000-க்கு அனுமதி வழங்கப்பட்டு ரூ. 10,000